## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

வண்டத்தரிப்பு பிரதான வீதியிலும் அடுத்தும் எனக்குச் சொந்தமான காணி விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் பொன்னையா நிவாகராசா, பிரதானவீதி, வண்டத்தரிப்பு அவர்களுடன் தொடர்புகொள்ளவும். 2319

### தேவை

பணம் சேகரிப்பவர்:

எமது ஸ்தாபனத்தின் நிலுவைப் பணங்களைச் சேகரிக்க திறமைவாய்ந்த ஒருவர் தேவை. (வயது 25-35) பிணைப்பணம் 1000/- ரூபா. கேற்றபடியான திறமையான ஊதியம் வழங்கப்படும். எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்: பாஷன் வேணிஷிங் மனேஜர், 7, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம். 2273

ஏஜென்டுகள்

யாழ்ப்பாண குடாநாடு, கிளிநொச்சி, தீவுப்பகுதிகளில் பெயர்பெற்ற நுவரெலியா காவட்ட 'மஹேஸ்வரா தேயிலை' கொண்டுசென்று விநியோகம் செய்வதற்கு ஏஜென்டுகள் தேவை. தகுந்த கமிஷன் உண்டு. பிணைப்பணம் கட்டவேண்டும். விபரங்களுக்கு: மஹேஸ்வரா தேயிலை நிலையம், வல்வெட்டித்துறை. 2272

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றோர் இனும் மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எமிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் சுப்புரமணியத்தார் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வானொலி

### கொழும்பு

**சனி 28-1-67**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 மசைநற்சிந்தனை, 6-40 சத்தோஷிக்கநற்சிந்தனை, 6-45 இசைப்பாடல்கள், 7-20 இனக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-15 இசை மயிலிறகுகள்.

பகல் 12-00 இசை நேரம், 1-40 சுதிப்பு இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநினைவு வாழ்த்துக்கள், 5 30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 வயலின் — மகேஸ்வரி நகுலேஸ்வரன், 6-45 இராமசஞ்சிகை, 7-30 குங்குமம் —மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 4-45, 7-00, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
HIS and HERS

REGAL—JAFFNA
NOW SHOWING
Dean Martin
Kim Novak
KISS ME STUPID
(ADULTS)


## மல்லாகம் நீதிமன்றத்தில்

### ஓவசியர்கள் அடித்தார்களாம்

மாவிட்டபுரம், வெள்ளி இரண்டு பி. டபிள்யு. டி. ஓவசியர்கள் ஒடுவரைப் பொல்லால் அடித்துக் காயம் ஏற்படுத்தியதாக கண்ணகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் ஓர் ஓவசியர் சுகவீனம் காரணமாக நீதிமன்றத்திற்கு வராமையால் மல்லாகம் நீதிபதி வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

இவ்வழக்கில் தெல்லிப்பழைப் பகுதி பி. டபிள்யு. டி. ஓவசியர் மூத்ததம்பி சின்னப்பாவும், பண்டத்தரிப்பு பகுதி பி. டபிள்யு. டி. ஓவசியர் சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியமும் சென்ற செப்டம்பர் மாதம் 16-ந் திகதி முதலாம் எதிரியின் மடுமகனும் பூநகரி டி. ஆர். ஓ. காரியாலயத்தைச் சேர்ந்த எழுதுவினைஞருமான தம்பு சிவசங்கரநாதன் என்பவரை தெல்லிப்பழையில் வைத்துப் பொல்லால் தாக்கிக் காயம் விளைவித்ததாக கண்ணகம் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### கிராமசேவகர் மீது வழக்கு

மாவிட்டபுரம், வெள்ளி இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி மாவிட்டபுரம் கிளைக் காரியாலயத்திற்கு முன்னால் உள்ள கட்சியின் விளம்பரப் பலகை அகற்றப்பட்டது சம்பந்தமாக காங்கேசன்துறை பொலிசார் கிராமசேவகர் ஒருவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கில் வழக்காளி தரப்பினர் விசாரணைக்கு ஆயத்தமில்லாதபடியால் நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 26-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

இவ்வழக்கில் காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும் கிராமசேவையாளருமான சின்னத்தம்பி குணரத்தினம் என்பவர் சென்ற செப்டம்பர் மாதம் 23-ந் திகதி மாவிட்டபுரம் சோமசுந்தரம் செனுதிராசாவுக்குச் சொந்தமானதும், "இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி மாவிட்டபுரம் கிளை" என்ற பெயர் பொறிக்கப்பட்டதும் 75 ரூபா பெறுமதியுள்ளதுமான விளம்பரப் பலகையை இனம் தெரியாத மூவர் அகற்றுவதற்கு உடந்தையாக இருந்ததாக

(5-ம் பக்கம் பார்க்க)


மனோஹரா
தினசரி பிற்பகல்
3-00, 6-30, 10 00
போயா தினங்களில் 10-30 முற்பகல்
கிளியோபட்ரா
பள்ளிக்கூடங்களுக்கு சலுகைகள் உண்டு
MANOHARA
Elizabeth Taylor, Richard Burton & Rex Harrison
in
CLEOPATRA
Concessions to Schools available)

யூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
பார்த்தால் பசி தீரும்


## விளம்பரம்


மலிவு விற்பனை
31-1-1967
வரைக்கும்
மூக்குக் கண்ணாடிகள்
பிறேம்கள்
முதலியன
25% சதவீதம் கழிவுடன்
விற்பனையாகிறது.
பல் வேலைகளுக்கும்
அரைச்சலார்
எஸ். எம். பெர்னாண்டோ
18, பிரதான வீதி,
1-ம் குறுக்குத்தெருச் சந்தி,
யாழ்ப்பாணம் 1051

விக்ரேஸ்
மின்சார வேலைகள்
No 6, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

மோட்டார், ஆமச்சர் நிலைவிட்டு றேடியோ மற்றும் சகல மக்னெரோ கொயில் (Magneto Coil) களும் ஒருவருட உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். 2408


### சேலை வாங்கினுல் காற்சட்டைத் துணி

உடுவில், வெள்ளி கப்பன்புக்லி கொடுத்து. ஒருசேலை வாங்குபவர்களுக்கு மூன்றுயார் காற்சட்டைத்துணி வழங்கப்படுகின்றது. உடுவில் மேற்கு ஐக்கிய பண்டகசாலையில் நூல் வாரம் மேற்படி காற்சட்டைத்துணி பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. நீண்டநாட்களின் பின்னர் இப்பண்டகசாலையில் இப்பொழுதான் காற்சட்டைத்துணி விநியோகம் நடைபெறுகிறது.

### திறப்புக்கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஒரு திறப்புக்கோர்வை கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.


பார்க்கர்




எல்லா பேனைகளுக்கும் உகந்த சிறந்த மை!

- புதிய பேனைகளை புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது.
- பழைய பேனைகளை புதிய ஜீவன் பெறச் செய்கின்றது.

உங்கள் பேனை புதியதோ, பழையதோ, என்ன ரகமோ, என்ன நிலையோ - ஆயினும் அதற்கு பார்க்கர் சுப்பர் குயிங்க் மை நிரப்புவது அத்தியாவசியமே! பேனைகள் எழுத தயங்கினுல், தாமதித்தால் அது பேனைகளின் குற்றமல்ல; பாவிக்கும் மையின் குற்றம்! தரம் குறைந்த மைகள், குழாயில் அடைசலையும் தடங்கலையும் உண்டாக்கி எழுத்து முனையை "வாடச்" செய்கின்றன. இச் சந்தர்ப்பங்களில்தான் நீங்கள் சொல்வ் - X உடைய சுப்பர் குயிங்க் மையை நிரப்பவேண்டும். உங்கள் பேனையில் சுப்பர் குயிங்கினை நிரப்புங்கள்! இதிலுள்ள சொல்வ் - X அடைசலை அகற்றி..... எழுதும்போதே பேனையை சுத்திகரிக்கும்!

பள்ளிவேலைக்கும், வீட்டுவேலைக்கும் பாவியுங்கள் கழுவக்கூடிய ரோயல் புளூ

நிரந்தரமான கந்தோர் ரெக்கார்டுகளுக்குப் பாவியுங்கள் பெர்மனன்ட் புளூ, பிளக், புளூ - பௌக், ரெட், கிரீன் மற்றும் டர்குயிஸ் புளூ.


பார்க்கர் பென் கம்பனிக்காகத் தயாரிப்பவர்கள்

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்

3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பினாஹா (வெள்ளவத்தை) | நவா (கோட்டபனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
மொடேர்ன் (பதுளை) | லக்ஷ்மி (ரத்னபுரி) | விஜிதா (ஹட்டன்)

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்னை உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.



எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா
எம். ஆர். ராதா, அசோகன், நம்பியார், நாகேஷ், மனோரமா
நடித்த
தேவர் பிலிம்ஸ்
தொழிலாளி
டைரக்ஷன்: திருமுகம்.
இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடை உடைத்து நள்ளிரவில் கொள்ளை

கிளிநொச்சி, வெள்ளி
நள்ளிரவில் கடையொன்று உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. தருமபுரத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

ரொக்கப்பணம் ரூ 2,100 தங்கநகைகளும் உணவுப் பொருட்களும் களவாடப் பட்டுள்ளன

கிளிநொச்சிப் பொலிஸாருக்கு கடைச்சொந்தக்காரர் முறைப்பாடு செய்தார். இதனைத்தொடர்ந்து கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இருவரைக் கைதுசெய்தது. பெருமாள்பழனி (34 வயது) காளிமுத்து பெரியசாமி (36) ஆகிய இந்த இருவரையும் பொலிஸார் கைது செய்த இடத்தில் பணமும் தங்கநகையும் 22 அடி ஆழமுள்ள கிணற்றுக்கு பத்து அடி தண்ணீருக்கு மேலுள்ள ஒரு பொந்துக்குள் ஒழித்து வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரின் சட்டைப்பையிலிருந்து கஞ்சாவும், ஒருவரது வீட்டில் மூன்று போத்தல் வடிசாராயமும் இருக்க பொலிஸார் கண்டுபிடித்தனர்.

## கோரிக்கை

சுழிபுரம், வெள்ளி
அகில இலங்கை தமிழ் மோகம் உபதபால் அதிபர்கள் சங்க பொதுக் கூட்டத்தை உடன் கூட்டுமாறு பண்ணாகம், தொல்புரம் விளான், நாகேந்திரமடம் ஆகிய இடங்களைச்சேர்ந்த உபதபால் அதிபர்கள் சங்க செயலாளரை கோரியுள்ளனர்.

## அரியக்குடியார் மறைவுக்கு அனுதாபம்

உடுவில் வெள்ளி
"சமீபகாலமாக தொடர்ந்து நாம் பல கலைஞர்களையும் பாடகர்களையும், கவிஞர்களையும் இழந்துகொண்டு வருகின்றோம். தமிழகத்தின் சங்கீதரசிகளின் தனக்கென ஒருபாதையை வகுத்துக் கொண்ட பத்மபூஷணம் அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் அவர்களையும் நாம் இழந்துவிட்டோம் தமிழகம் மட்டுமல்ல, தமிழ் உலகமெங்குமே ஸ்ரீ இராமானுஜ ஐயங்காரின் மறைவு பெரும் நஷ்டத்தை விளைவித்துவிட்டது"

உடுவில் இளைஞர் கழகக் கூட்டத்தில் காலஞ் சென்ற கர்நாடகசங்கீதமேதை அரியக்குடி ஸ்ரீராமனுஜ ஐயங்காரின் மறைவுகுறித்து திரு சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார். திரு வி சுப்பிரமணியம் பூரணந்தசர்மா கூட்டத்திற்கு தலைமை வகித்தார். அரியக்குடியாருக்கு அனுதாபம்தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி
கீரிமலையைச் சேர்ந்த கிருஷ்ணசெல்வராசா என்பவர் சென்றவருடம் பெப்ரவரி மாதம் 4-ந் திகதி பன்னாலையைச் சேர்ந்த குஞ்சர் இரத்தினம் என்பவர் ஒருவருக்கு வாளால் வெட்டுப் படுகாயம் ஏற்படுத்தியதாகவும். அவருக்கு பன்னாலையைச் சேர்ந்தவர்களான வயிரவிமுத்தையா, கந்தையா தங்கராசா ஆகியோர் உடந்தையாகவிருந்ததாகவும், மூவரும்குஞ்சரத்தினத்துக்கு காயம் விளைவிக்கும் நோக்குடன் அவரின் வளவிற்குள் அத்துமீறி பிரவேசித்ததாகவும் குற்றம்கள் சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு தொடர்ந்து மல்லாகம் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தொகுப்புரை நிகழ்த்தினர். நீதிபதி தீர்ப்பு வழங்குவதற்காக வழக்கை இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## மல்லாகம் நீதிமன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், மாவிட்டபுரம் மாகாமகன்மைந்தைக் கெட்ட வார்த்தையால் ஏசியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி
கீரிமலை சேந்தான்குளத்தில் லொறி ஒன்று குடைசாய்ந்து ஒருவர் மரணமானது சம்பந்தமாகக் காங்கேசன்துறைப் பொலிசார் பொது மராமத்து ஓவசியருக்கும், கங்காணிக்கும் எதிராகத் தொடர்ந்த வழக்கில் நீதிபதி திரு டி. எஸ். நிற்சிங்கா எதிரிகளை விடுதலை செய்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம் என்பவர் செலுத்திச் சென்ற லொறி குடைசாய்ந்து அவர் அதற்குள் நசுங்கி மரணமானதற்குக் காரணமாக இருந்ததாக இளவாலையைச் சேர்ந்த கிருச்செல்வராசா இமானுவேல் தம்பிராசா கங்காணி வைரவன் என்றழைக்கப்படும் வைரவன் செல்லன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் இவ் வழக்குத்தொடரப்பட்டிருந்தது

## ரயிலுக்குக் கல்வீச்சு

மீசாலை, வெள்ளி
இருதினங்களுக்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த இரவுமெயில் ரயிலுக்கு மீசாலையில் கல்வீச்சு நடந்தது. பிரயாணி ஒருவர் படுகாயமடைந்தார். விஷயம் 'கார்ட்டிடம்' தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. கொடிகாமம் புகையிரதநிலைய அதிபர் மூலமாக இச்சம்பவம் சாவகச்சேரிப்பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

கிளிநொச்சி, வெள்ளி
கிளிநொச்சி - பரந்தனிடையே இரட்டைத்தட்டு பஸ் சேவை நடத்துமாறு கோரி கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் டிப்போ முகாமையாளருக்கு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உப டிப்போவில் உள்ள பஸ்களின் நிலை மிகவும் மோசமாக இருப்பதால் சேவைக்கேற்ற பஸ்களை அனுப்பி இப்பகுதி மக்களுக்கு கஷ்டமில்லாது போக்குவரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு எம் பி கேட்டுள்ளார்.

இப்பகுதி மக்கள் பஸ் சேவையின் சீர்கேட்டை திரு. இரத்தினத்திடம் முறையிட்டதனைத் தொடர்ந்து மேற்படி கடிதத்தை அவர் எழுதியுள்ளார்.

## "ஆத்மீகத்தை உணர வேண்டும்"

வெள்ளவத்தை, வெள்ளி
"சைவ சமயம் சுதந்திரமானது. அதில் இறைவனைப் போற்றுவோரும், தூற்றுவோரும், கடவுளே இல்லை என்று சாதிப்பவர்களும் பலர் இருக்கிறார்கள்".

இவ்வாறு உடுப்பிட்டியில் நடைபெற்ற சைவ நெறிக் கழகக் கூட்டத்திற்குத் தமிழ்ப்பகுதியைச் சேர்ந்த தலைமை வகித்துப் பேசிய திரு. கோ. பாக்கியராஜா கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "மாலிபர்களிடையே அறிவுப் புரட்சி ஏற்பட வேண்டுமே தவிர ஆத்மீகத்தளர்ச்சி ஏற்படக்கூடாது. இறைவனை இல்லையென்பதும் சமயங்கள் மூடக்கொள்கைகள் என்பதும் மிகவும் இலகுவான காரியங்கள். ஆனால் ஆத்மீக வாழ்வின் இன்பத்தை உணர்ந்தவர்களுக்குத்தான் அவற்றின் நல்ல தன்மை தெரியும்". திருவாளர்கள் கே சிவபாதசுந்தரம் கே. இலிங்கநாதன், சே. கந்தசாமி ஆகியோரும் பேசினர் திரு. கே. கதிர்காமத்தம்பி நன்றி கூறினார்.

## விளையாட்டு மைதானம் எம் பி. திறந்துவைத்தார்

முல்லைத்தீவு, வெள்ளி
மாணவர்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுசேர வழிவகுப்பது விளையாட்டு. முள்ளியவளை — தண்ணீரூற்று ஆகிய இரு கிராமங்களினதும் வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுகூடி இந்த மைதானத்தில் காட்டியவளிப்பது வருங்கால சுபிட்சத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த விளையாட்டு மைதானத்தை திறந்துவைத்துப் பேசுகையில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் கூறினார்.

வவனியா அரசாங்க அதிபர் திறந்தவெளி அரங்குக்கான அத்திவாரக்கல்லை நாட்டினார் இதைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் பேச்சுக்களும் இடம்பெற்றன.

## நாய்களை விரட்ட ஒரு மருந்து

ஒட்டாவா, ஜன. 27
வங்கூவர் பகுதியிலுள்ள தபால் வண்டிகளுக்குவிலங்குகளை விரட்டும் மருந்து தெளிக்கும் கருவி பொருத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாய்களின் தொல்லையைச் சமாளிப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

இந்த அறிவித்தலை வெளியிட்ட போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், ஜீன் பியர் 1965-ம் ஆண்டில் 579 நாய் கடி சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் இதன் காரணமாக 353 நாள் வேலை பாதிக்கப்பட்டதென்றும் சொன்னார். கடந்த காலத்தில், நாய்களின் தொல்லை உள்ள இடங்களில், தொல்லை தரும் நாய்களை அடக்கும் படி பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுவர் அல்லது அந்தவைய நாய்கள் வளர்ப்போருக்கு தபால் பட்டுவாடா செய்வது நிறுத்தப்படும். இந்த ஏற்பாடு திருப்தியளிப்பதாய் இல்லை என்று போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் தெரிவித்தார்.

விலங்கு விரட்டும் மருந்து கடுகுச் செடியிலிருந்து செய்யப்படுகிறது. நாய்களுக்கோ மனிதருக்கோ நிலையான கெடுதல் எதுவும் ஏற்படுத்தாதென்றும் அவர் தெரிவித்தார்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு

## நுவரேலியா மாவட்டத்தில் நியமனம் கிடைத்தது

யாழ்ப்பாணம், சனி
தோட்ட பாடசாலைகளிலிருந்து சொந்தச் செலவில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களில், 19 பேருக்கு நுவரேலியா மாவட்டத்தில் பெப்ரவரி 1-ம் தேதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன்சென்ற ஆசிரியர் குழுவொன்று நேற்று பேட்டிகண்டது. இக்குழுவிற்கு திரு. ஞா. பெ. அப்பிரகு தலைமைதாங்கினார்.

அரசாங்க பாடசாலையிலிருந்து பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருப்பது, வேலையின்மை காட்டிக்காட்டப்பட்டதுடன் 81 தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் பலமாதங்கள் நியமனம் பெறாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நிரந்தரக்காரியதரிசி 19 பேருக்கு நியமனம் வழங்குவதாக தெரிவித்தார்.

## சரித்திரத்தில் முதல் தடவை

மாவிட்டபுரம், வெள்ளி
மல்லாகம் நீதிமன்றத்தின் சரித்திரத்திலேயே முதல் தடவையாகவிருதர் ஒருவர் கொலையுண்ட ஒருவர் இறக்கமுன் நீதவானை சேவையில் உள்ள ஒருவருக்கு அளித்த வாக்குமூலத்தை கோர்ட்டில் சமர்ப்பித்த சம்பவம் ஏற்று நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் சுழிபுரம் கொலைவழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நடைபெற்றுள்ளது. இது பற்றிக் கூறப்படுவதாவது: இக்கொலை வழக்கில் காலஞ்சென்றவர் இறக்க முன் யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரியான காலஞ்சென்ற திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு ஒரு வாக்குமூலமளித்திருந்தார். பின்னர் திரு. அமிர்தலிங்கமும் மரணமாகிவிட்டார். இதனால் அவருடைய மரண விசாரணை பதிவு ஏடுகளை யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் நீதிமன்றம் பாரமேற்றிருந்தது. இப்பொழுது விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் சுழிபுரம் கொலை வழக்கில் காலஞ் சென்றவர் இறக்குமுன் மரணவிசாரணை அதிகாரிக்கு அளித்தவாக்குமூலம்சமர்ப்பிக்க வேண்டி வந்தது. இதனால் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்ற பிரதமலிகிதர் திரு. சி. சிவகுருநாதன் அப்பதிவேட்டை மல்லாகம்நீதிமன்றத்தில்விசாரணையின்போது சமர்ப்பித்துச்சாட்சியமளித்தார்.

## சூறாவளி வேகத்தில்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் போட்டியிடுகிறார்கள். மைசூரில் காங்கிரஸ் 27 இடங்களிலும் சுதந்திரா 11 இடங்களிலும் மோதிக்கொள்கின்றன. மற்றும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் போட்டியிடுகிறார்கள்.

### மைசூர் அசெம்பிளிக்கு

மைசூர் அசெம்பிளித் தொகுதிகளில் இரண்டுக்குப் போட்டியில்லை. எஞ்சியுள்ள 214 தொகுதிகளுக்கு 722 அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். 68 தொகுதிகளில் தான் நேரடிப் போட்டி இருக்கிறது. காங்கிரஸுடன் நேரடிப் போட்டி வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் விரும்பியும் கூட அந்த விருப்பம் ஓரளவு தான் கைகூடியிருக்கிறதென்று சொல்லவேண்டும். உடன்பாடு செய்துகொண்ட எதிர்க்கட்சிகள் தாங்கள் ஒப்புக்கொண்டதற்கு அதிகமாக வேட்பாளர்களை நிறுத்தி வைத்திருக்கிறது. காங்கிரஸ் 214 தொகுதிகளில் போட்டி போடுகிறது. பி. சோஷலிஸ்ட் 64லிலும், சுதந்திரா 46லிலும், ஜனசங்கம் 44லிலும் போட்டியிடுகின்றன.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி
நீர்வேலிக் கந்தசாமி கோவில் மகா கும்பாபிஷேகம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. ஆயிரத்திற்கு மேலான பக்தர்கள் இக்கண் கொள்ளாக் காட்சியை கண்டு தரிசித்தனர். கும்பாபிஷேகத்தின் பின்னர் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இரவு திருக்கல்யாணமும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவ்வைபவத்திற்கு பிரம்மஸ்ரீ இராசேந்திரக் குருக்கள் தலைமை தாங்கினார்.

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி
புன்னாலைக்கட்டுவன் வடக்கு அம்மாள் புதிய ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகம் புதன்கிழமை நடைபெறும்.

## காரியாலயம் இடம் மாறுகிறது

வெள்ளவத்தை, வெள்.
கொழும்பு பிரதம தபாற்கந்தோர்க் கட்டடத்திலுள்ள பிரதம தபாலதிபரின் காரியாலயமும், கொள்ளுப் பிட்டியிலுள்ள தபால் தந்திப் பரிவர்த்தனைப் பயிற்சி நிலையத்தின் ஒரு பகுதியும் இம்மாதம் 31-ம் திகதிமுதல் கோட்டை லோட்டஸ் வீதியிலுள்ள புதிய கட்டிடத்திற்கு இடமாற்றஞ் செய்யப்படவிருக்கின்றன.

இவ்வைபவத்தை முன்னிட்டு இம்மாதம் 30-ம்திகதி இரவு முழுவதும் பிரதம தபாற் கந்தோர்த் தலைமை அதிபரின் காரியாலயத்தில் பிரித் ஓதுதல் வைபவங்கள் நடைபெறும்.

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், சனி
அகில இலங்கை சேக்கிழார்மன்றத் ஆதரவில் மாதந்தோறும் வைகாசிலும் பெரியபுராணத்தில் சேக்கிழாரால் பாடப்பெற்ற நாயன்மார்களின் சரித்திரங்கள் சங்கீத கதாப் பிரசங்கங்களாக நல்லைஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தம்பிரான் சுவாமிகளால் செய்யப்படும் மாணிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தினரின் அழைப்பிற்கிணங்க இத்தொடரின் முதற் பிரசங்கம் தம்பிரான் ஸ்ரீ முருகனும் பெருமாநற்றி சனிக்கிழமை மாஉலமாணிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்

## சுவாமிகளிடம் மடம் கையளிப்பு

சுழிபுரம், வெள்ளி
சித்தன்கேணி பிள்ளையார் கோவிலுக்கருகாமையிலுள்ள ஸ்ரீமஸ்ரீ க. அம்பலவாண சுவாமிகளின் மடம் நல்லூர் திருஞானசம்பந்த ஆதீனகர்த்தா ஸ்வாமிநாதத் தம்பிரான் சுவாமிகளிடம் கையளிக்கப்பட்டது. கையளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து கதாப்பிரசங்க பூசைகள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் நெல் விதைத்தனர்

மண்டைதீவு, வெள்ளி

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் மாணவ மாணவிகள் சென்ற வெள்ளிக்கிழமை பெற்றோர் ஆசிரிய ஆசிரியைகளுடன் மண்டைதீவு கிழக்கிலுள்ள இருவயல்களை உழுது பண்படுத்தி ஒடு பூ இன விதைநெல்லை குழி நெல் போடும் முறைப்படி விதைத்தனர். இவ் விதை நெல்லு முருங்கைக்காயன் என்னும் நெல்லுடன் ஐப்பானிய விதைகுறள் ஒன்றையும் கலந்து உற்பத்தி செய்யப்பட்டது. இது கூடிய நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய இனமெனக்கண்டு விவசாயப்பகுதியினர் இவ்வினத்தைப் பெருக்குவதற்கு முயற்சி எடுக்கின்றனர். இதை உற்பத்தி செய்வதற்கு மழை பெய்யவேண்டுமென்று பிரார்த்தனையுடன் மகாவித்தியாலய மாணவ மாணவிகள் விதைவிதைத்துச் சென்றனர்.

## இடமாற்றங்கள்

புதுக்குடியிருப்பு, வெள்ளி

புதுக்குடியிருப்பு சி சி தமிழ்க்கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு சா. மு. தம்பித்துரை கூழா முறிப்பு அரசினர் கலவன் தமிழ்க்கலவன் பாடசாலைக்குத் தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் உதவி ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி ரீட்டா வாஷிங்டன் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

துணுக்காய், வெள்ளி

துணுக்காய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய அப்போதிக்கரி திரு எம். எஸ். பாலசுந்தரம் மதவாச்சிக்கும், [illegible]வல ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய திரு எஸ். கதிரேசபிள்ளை துணுக்காய்க்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## மூளைக்கோளாறு செய்த [illegible]

கண்டி, வெள்ளி

கண்டி பொலிஸ் நிலையத்தின் முன்னிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடமுயன்ற ஒருவர் பொலிசினால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் மூளைக்கோளாறு உள்ளவர் என்று வைத்திய அதிகாரி கூறியதினால் விடுதலை செய்யப்பட்டார். காற்சட்டை சேட் அணிந்து நாகரீகமுள்ளவராக இருந்த இவர் கண்டி பொலிஸ் நிலையத்தின் முன்னிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டருடைய மோட்டார் சைக்கிளை எடுத்து ஸ்டார்ட் செய்யும் போது அது ஸ்டார்ட் செய்ய மறுத்தது. அப்போது அவ்விடத்திலே வந்த மற்றொரு கான்ஸ்டபிளைக் கூப்பிட்டு அதைத் தள்ளும்படி கேட்க அந்தக் கான்ஸ்டபிளும் தள்ளினார். இதை பொலிஸ் நிலையத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வேறு ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் உடனடியாகச் சென்று சந்தேகத்தின் பெயரில் கைது செய்தார். பின்தான் அந்த நபர் மூளைக்கோளாறு உள்ளவர் என்று கண்டு பிடிக்கப்பட்டது.

## தேநீரும் திருட்டும்

வவுனியா, வெள்ளி

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒரு காரியாதிகாரி வீட்டில் நள்ளிரவில் கள்ளர்கள் புகுந்து தேநீர் தயாரித்துக் குடித்ததோடு வீட்டில் உள்ள சாமான்களை எல்லாம் திருடிச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

காரியாலயத்துக்கு உரிய சில சாமான்களும் திருட்டுப் போனதாக அறிவிக்கப்படுகின்றது.

எல்லோரும்
விரும்பிக்
கேட்பது
யானை மார்க்
கிறீம்
சோடா
நுரை பொங்கும்
இனிய
யானை மார்க்
கிறீம்
சோடாவை
அருந்தினால்தான்
அதன் சுவையை
உணரமுடியும்!




CCS
எலிபன்ட் ஹவுஸ்
கொழும்பு
GRANTS 130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

